# மெட்ரோ ரெயில் தூண்களில் சுவரொட்டிகள் ஒட்டினால் அபராதம்

சென்னை, செப்.4–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சென்னையில் உள்ள மெட்ரோ ரெயில் கட்டமைப்புகளான ரெயில் நிலையங்கள், ரெயில் பாதைகளுக்கு அமைக்கப்பட்டுள்ள தூண்களில் சுவரொட்டிகள் மற்றும் துண்டு பிரசுரங்களை ஒட்டுவது, விளம்பரங்களை எழுதுவது சட்டவிரோத செயலாகும். இதனையும் மீறி செயல்படுபவர்களுக்கு 6 மாத சிறைத்தண்டனை அல்லது ஆயிரம் ரூபாய் அபாரதம் விதிக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.